**சுருக்கம்**

வீட்டுவசதி – மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு சொந்தமான அகஸ்தியர்பட்டி காலனியில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு 50 செண்ட் இடத்தை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறைக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீகூ.ச.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.55** **நாள்:27.03.2015**

**ஜய வருடம், பங்குனி 13**

**திருவள்ளுவராண்டு 2046**

படிக்கப்பட்டது:

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க.எண்.6830/2014/இ4, நாள்31.12.2014.

= = = = =

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தினால் உருவாக்கப்பட்ட அகஸ்தியர்பட்டி காலனி மனைத்திட்டம் சர்வே எண்.152, சிவந்திபுரம் பஞ்சாயத்தில் 89 ஏக்கர் 11 செண்ட் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எண்.688/ 1990ன்படி மேம்படுத்தப்பட்டு 846 மனைகளாக பிரித்து அதன் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்து, அதில் 706 மனைகளில் சங்க உறுப்பினர்கள் வீடுகள் கட்டி உள்ளார்கள் எனவும், மனைகளை பிரித்து உறுப்பினர்களுக்கு வழங்கும் போது மகாநதி தெருவிற்கு தெற்கே பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு 54,222 சதுரடி நிலமும் மற்றும் திருமண மண்டபத்திற்கென 5,69,258 சதுரடி நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட கோரியுள்ளதை அடுத்து, வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், வைராவிகுளம் தனது கடிதத்தில் 21.02.2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில்

அகஸ்தியர்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்று என்றும், இது தற்பொழுது அகஸ்தியர்பட்டியில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் இயங்கி வருகிறது என்றும், இப்பகுதி மக்கள் மருத்துவ உதவி பெறுவதற்கு 10 கிலோமீட்டர் தூரம் சென்றால்தான் அரசு மருத்துவமனையான அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரத்தில் மருத்துவ வசதி பெற முடியும் என்ற நிலை உள்ளது எனவும், எனவே, இந்தக் கோரிக்கையினை ஏற்று மேற்படி மதுரா கோட்ஸ் மற்றும் பொது சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் 50 சென்ட் இடத்தை மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை கட்ட ஒதுக்கீடு செய்து தரும்படி கோரியுள்ளதாகவும், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), திருநெல்வேலி இதனை பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் சங்கத்தின் 14.06.2014ல் நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எண்.2 இயற்றப்பட்டு மேற்படி அகஸ்தியர்பட்டி காலனியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இலவசமாக மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொது சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ள இடத்திலிருந்து 50 சென்ட் இடத்தை வழங்க ஏகமனதாக தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் மேலும் தனது கடிதத்தில், கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலன் கருதியும், தமிழக அரசின் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் சிறப்பினமாக கருதி வகைமாற்றம் செய்தும், மேலும் அரசாணை எண்.224, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 27.11.2009ன்படி விற்பனைக் குழு மூலம் விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தியும், 1998ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என்ற வழிமுறைக்கு விலக்களித்தும், சங்கத்திற்கு சொந்தமான 50 சென்ட் இடத்தை இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3—ல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின், கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலன் கருதியும், தமிழக அரசின் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் சிறப்பினமாக கருதி வகைமாற்றம் செய்தும், மேலும் அரசாணை எண்.224, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 27.11.2009ன்படி விற்பனைக் குழு மூலம் விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தியும், 1998ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு

மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என்ற வழிமுறைக்கு விலக்களித்தும், சங்கத்திற்கு சொந்தமான 50 சென்ட் இடத்தை இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி),
சென்னை–35.

<u>நகல்</u>:
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி (ம) வேளாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9
அரசு செயலாளரின் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை–9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அநமு–1) துறை,
சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

**<u>சுருக்கம்</u>**

வீட்டுவசதி – மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு சொந்தமான அகஸ்தியர்பட்டி காலனியில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு 50 சென்ட் இடத்தை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறைக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**<u>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீகூ.ச.1) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.55** **நாள்:27.03.2015**

**ஜய வருடம், பங்குனி 13**

**திருவள்ளுவராண்டு 2046**

படிக்கப்பட்டது:

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க.எண்.6830/2014/இ4, நாள்31.12.2014.

= = = = =

**<u>ஆணை:</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தினால் உருவாக்கப்பட்ட அகஸ்தியர்பட்டி காலனி மனைத்திட்டம் சர்வே எண்.152, சிவந்திபுரம் பஞ்சாயத்தில் 89 ஏக்கர் 11 சென்ட் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எண்.688/ 1990ன்படி மேம்படுத்தப்பட்டு 846 மனைகளாக பிரித்து அதன் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்து, அதில் 706 மனைகளில் சங்க உறுப்பினர்கள் வீடுகள் கட்டி உள்ளார்கள் எனவும், மனைகளை பிரித்து உறுப்பினர்களுக்கு வழங்கும் போது மகாநதி தெருவிற்கு தெற்கே பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு 54,222 சதுரடி நிலமும் மற்றும் திருமண மண்டபத்திற்கென 5,69,258 சதுரடி நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட கோரியுள்ளதை அடுத்து, வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், வைராவிகுளம் தனது கடிதத்தில் 21.02.2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில்

அகஸ்தியர்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்று என்றும், இது தற்பொழுது அகஸ்தியர்பட்டியில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் இயங்கி வருகிறது என்றும், இப்பகுதி மக்கள் மருத்துவ உதவி பெறுவதற்கு 10 கிலோமீட்டர் தூரம் சென்றால்தான் அரசு மருத்துவமனையான அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரத்தில் மருத்துவ வசதி பெற முடியும் என்ற நிலை உள்ளது எனவும், எனவே, இந்தக் கோரிக்கையினை ஏற்று மேற்படி மதுரா கோட்ஸ் மற்றும் பொது சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் 50 சென்ட் இடத்தை மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை கட்ட ஒதுக்கீடு செய்து தரும்படி கோரியுள்ளதாகவும், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), திருநெல்வேலி இதனை பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் சங்கத்தின் 14.06.2014ல் நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எண்.2 இயற்றப்பட்டு மேற்படி அகஸ்தியர்பட்டி காலனியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இலவசமாக மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொது சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் பொது ஒதுக்கீடு தலைப்பில் கடைகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ள இடத்திலிருந்து 50 சென்ட் இடத்தை வழங்க ஏகமனதாக தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் மேலும் தனது கடிதத்தில், கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலன் கருதியும், தமிழக அரசின் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் சிறப்பினமாக கருதி வகைமாற்றம் செய்தும், மேலும் அரசாணை எண்.224, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 27.11.2009ன்படி விற்பனைக் குழு மூலம் விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தியும், 1998ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என்ற வழிமுறைக்கு விலக்களித்தும், சங்கத்திற்கு சொந்தமான 50 சென்ட் இடத்தை இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின், கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் நலன் கருதியும், தமிழக அரசின் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் சிறப்பினமாக கருதி வகைமாற்றம் செய்தும், மேலும் அரசாணை எண்.224, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 27.11.2009ன்படி விற்பனைக் குழு மூலம் விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தியும், 1998ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு

மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என்ற வழிமுறைக்கு விலக்களித்தும், சங்கத்திற்கு சொந்தமான **50** சென்ட் இடத்தை இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய மதுரா கோட்ஸ் தொழிலாளர் மற்றும் பொதுச் சேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் **(**வீட்டுவசதி**)**,
சென்னை**–35.**
<u>நகல்</u>:
மாண்புமிகு அமைச்சர் **(**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி (ம) வேளாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை**–9**
அரசு செயலாளரின் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை**–9**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி **(**அநமு**–1)** துறை,
சென்னை**–9**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**